# துவாக்குடி நகராட்சி



## நிர்வாக அறிக்கை

## 2019–20

# துவாக்குடி நகராட்சி

## 2019 – 2020–ம் ஆண்டு நிர்வாக அறிக்கை

### 1) அமைப்பும் மேலாண்மை :

இந்நகராட்சி அரசாணை எண்: 277 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (தேர்தல்) நாள்: 02.07.04 –ன்படி தேர்வுநிலை பேரூராட்சியிலிருந்து தரம் உயர்த்தப்பட்டு 05.7.2004– ம் தேதியிலிருந்து 3–ம் நிலை நகராட்சியாகவும், அரசாணை எண்.154 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 9.8.2010ன் படி 9.8.2010 முதல் இரண்டாம் நிலை நகராட்சியாகவும் செயல்பட்டு வருகிறது. மேலும் இந்நகராட்சி துவாக்குடி, துவாக்குடிமலை ஆகிய இரு பகுதிகளை உள்ளடக்கியது.

துவாக்குடி நகராட்சி திருவெறும்பூர் சட்டமன்ற தொகுதியில் அடங்கியுள்ளது.

2011 –ம் ஆண்டின் கணக்கெடுப்பின் படி மொத்த மக்கள் தொகை: 38875.

| | | | |
|---|---|---|---|
| அ) | நகரப்பரப்பளவு | : | 14.37 ச. கி. மீ. |
| ஆ) | மக்கள் தொகை | : | 38,875. |
| இ) | நகர்மன்ற உறுப்பினர் எண்ணிக்கை | : | 21 |
| ஈ) | நகராட்சியின் நிலை | : | இரண்டாம் நிலை |
| உ) | நகராட்சி எல்லைக்குள் அடங்கியுள்ள வருவாய் கிராமம் | : | எண் 84 – துவாக்குடி. |

### நகர்மன்றம்

அரசு ஆணை எண்: 135, 136 –ன் படி நகராட்சி பகுதி 21 வார்டுகளாக பிரிக்கப்பட்டு 17.10.2011 –ல் நகராட்சி மன்றத்தேர்தல் நடத்தப்பட்டது. 21 வார்டுகளில் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி தாழ்த்தபட்ட பிரிவினருக்கு ஒதுக்கப்பட்ட வார்டுகள் 4,11 மற்றும் 12 என மூன்று வார்டுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு இதில் தாழ்த்தப்பட்ட பிரிவு பெண்களுக்கு 12– வது வார்டும், மற்றும் 4,11 வார்டுகள் தாழ்த்தப்பட்ட பிரிவு பொது எனவும் மேலும் பெண்களுக்கு வார்டு எண் 7,9,10,14,18,20 என 6 வார்டுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது, ஆக மொத்தம் இந்நகராட்சியில் பெண்களுக்கென 7 வார்டுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

## நகர்மன்றக் கூட்டங்கள்

சாதாரணமாக மாதந்தோறும் மாதாந்திரக்கூட்டம் நடத்தப்பட்டு வருகிறது

## 2).ஆணையாளர் மற்றும் அலுவலர்கள்

**அறிக்கையாண்டில்** 01.01.2019 முதல் திருமதி.என்.ஸ்ரீதேவி,B.PT அவர்கள் ஆணையர் மற்றும் தனிஅலுவலராக 02.08.2019 வரை பணி புரிந்து வந்தார். 03.08.2019 முதல் திரு.ஜெ.வினாயகம், B.Sc., அவர்கள் ஆணையர் மற்றும் தனிஅலுவலராக 05.01.2020 வரை துவாக்குடி நகராட்சியில் பணிபுரிந்தார். மேலும் இந்நகராட்சி பொறியாளர் திரு.கே.முகமது இப்ராஹிம் என்பவர் 06.01.2020 ம் தேதி முதல் 18.02.2020ம் தேதி வரை ஆணையர் பதவியினை கூடுதல் பொறுப்பாக பார்த்து வந்தார்.

மேலும் திரு.ஜெ.வினாயகம், B.Sc., அவர்கள் ஆணையர் மற்றும் தனிஅலுவலராக 19.02.2020ம் தேதி முதல் 11.03.2020ம் தேதி வரை பணிபுரிந்தார்.அதன்பிறகு 12.3.2020 ம் தேதி முதல் 31.03.2020 ம் தேதி வரை இந்நகராட்சி பொறியாளர் திரு.கே.முகமது இப்ராஹிம் என்பவர் ஆணையர் பதவியினை கூடுதல் பொறுப்பாக பார்த்து வந்தார்.

இந்நகராட்சியில் மேலாளராக பணிபுரிந்து வந்த திருமதி.சி.வளர்மதி 30.04.2019 ஆம் தேதி வயது முதிர்வின் காரணமாக பணி ஓய்வு பெற்றுள்ளார். 01.05.2019 ஆம் தேதி முதல் திரு.ரா.காசிலிங்கம், (உதவியாளர் மற்றும் கணக்கர்) பொறுப்பு மேலாளராக பணிபுரிந்து வருகிறார்.

திரு.ரா.காசிலிங்கம், உதவியாளர் மற்றும் கணக்கராக 01.05.2019 முதல் பணிபுரிந்து வருகிறார்.

| வ. எண். | அனுமதிக்கப்பட்ட பணியிடம் | அனுமதிக்கப்பட்ட பணியிடம் எண்ணிக்கை | தற்போது பணிபுரியும் பணியாளர் எண்ணிக்கை | காலியிடம் |
|---|---|---|---|---|
| 1 | நகராட்சி பொறியாளர் | 1 | 1 | 0 |
| 2 | பொதுப்பணி மேற்பார்வையாளர் | 1 | 1 | 0 |
| 3 | மேலாளர் | 1 | 0 | 1 |
| 4 | உதவியாளர் | 1 | 1 | 0 |
| 5 | இளநிலை உதவியாளர் | 3 | 3 | 0 |
| 6 | சுகாதார ஆய்வர் | 1 | 1 | 0 |
| 7 | நகரமைப்பு ஆய்வர் | 1 | 1 | 0 |
| 8 | வருவாய் ஆய்வர் | 1 | 1 | 0 |
| 9 | வருவாய் உதவியாளர் | 2 | 2 | 0 |
| 10 | பணி ஆய்வர் | 1 | 0 | 1 |
| 11 | பதிவறை எழுத்தர் | 1 | 1 | 0 |
| 12 | அலுவலக உதவியாளர் | 1 | 1 | 0 |
| 13 | ஓட்டுநர் | 1 | 1 | 0 |
| 14 | பொது சுகாதார பணியாளர்கள் | 23 | 13 | 10 |

## 3) பொறியாளர் பிரிவு :

இந்நகராட்சியில் நகராட்சி பொறியாளர் பணியிடத்தில் 01.01.2019 முதல் 02.11.2019 வரை திரு.ஐ.சுப்ரமணி அவர்கள் பணிபுரிந்து வந்தார். திரு.முகமது இப்ராஹிம், என்பவர் 03.11.2019 முதல் நகராட்சி பொறியாளராக பணிபுரிந்து வருகிறார். இந்நகராட்சியின் பொதுபணி மேற்பார்வையாளராக திரு. பி. விஜய்கார்த்தி என்பவர் பணிபுரிந்து வருகிறார்.

## 4).வருவாய் பிரிவு

அறிக்கை ஆண்டில் ஒரு வருவாய் ஆய்வர் மற்றும் இரண்டு வருவாய் உதவியாளர்களுடன் 21 வார்டுகளின் வரி தொடர்பான பணிகளை செய்து வருகிறார்கள்.

## 5). நகரமைப்பு பிரிவு

இந்நகராட்சியில் நகரமைப்பு ஆய்வாளர் பணியிடம் அரசாணை எண்.30 நாள் 13.02.2013ல் தோற்றுவிக்கப்பட்டு மேற்கண்ட நகரமைப்பு ஆய்வாளர் பணியிடத்தில் திரு.கே. குமரேசன், என்பவர் 22.02.2018 முதல் பணிபுரிந்து வருகிறார்.

## போக்குவரத்துக்கள் :

### சாலைகள் மற்றும் பாலங்கள்

அ) இந்நகராட்சி வழியாகச் செல்லும் தேசியநெடுஞ்சாலை : நான்கு வழிச்சாலைகள் நாகப்பட்டினம் முதல் மைசூர் வரை அமைந்துள்ளது.

ஆ) இந்நகராட்சி வழியாகச் செல்லும் மாநில நெடுஞ்சாலை : துவாக்குடிமலை அண்ணா வளைவு முதல் அய்யம்பட்டி வரை

(இ) துவாக்குடி முதல் கீரனூர் வரையிலும் அமைந்துள்ளன அனைத்து தார்சாலைகளும் தற்போது நகராட்சியால் திருப்திகரமாக பராமரிக்கப்பட்டு வருகிறது.

<u>நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வரும் சாலைகளின் விபரம்</u>

| | | | |
|---|---|---|---|
| அ) | சிமெண்ட் சாலைகள் | : | 12.09 கி. மீ. |
| ஆ) | தார் சாலைகள் | : | 23.49 கி. மீ. |
| இ) | ஜல்லி சாலைகள் | : | 5.92 கி. மீ. |
| ஈ) | மண் சாலைகள் | : | 15.12 கி. மீ. |
| | மொத்தம் | : | 56.62 கி. மீ. |

## 6) (அ) உயர் நிலைப்பள்ளிகள் மற்றும் மேல்நிலைப்பள்ளிகள் :

நகராட்சியினால் பள்ளிகள் ஏதும் பராமரிக்கபபடவில்லை, இந்நகராட்சி எல்லையில் கீழ்கண்ட பள்ளிகள் மற்றும் கல்லூரிகள் இயங்கி வருகின்றன.

1) ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி, துவாக்குடிமலை

2) ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி, துவாக்குடி

3) ஆர்.இ.சி நடுநிலைப்பள்ளி, துவாக்குடி

4) அரசினர் மேல்நிலைப்பள்ளி, துவாக்குடி

5) அரசு கலைக்கல்லூரி, துவாக்குடிமலை

6) அரசு தொழில் நுட்ப கல்லூரி.

7) தேசிய தொழிற்நுட்ப பயிலகம்.

8) உணவு கலைக் கல்லூரி.

### (ஆ) தனியார் பள்ளிகள்

1) குழந்தை ஏசு மேல்நிலைப்பள்ளி (மகளிர்) துவாக்குடிமலை

2) சாரதா துவக்கப்பள்ளி, காமராஜபுரம்

3) விவேகானந்தா துவக்கப்பள்ளி, காமராஜபுரம்

4) செயின்ட் ஜோசப் மெட்ரிகுலேசன் பள்ளி, துவாக்குடிமலை.

## 7). விழாக்கள் / உழவர் சந்தை

அறிக்கை ஆண்டில் உள்ளூர் திருவிழாக்கள் வழக்கம் போல் நடைப்பெற்று வருகிறது, இந்நகராட்சியில் வாரச்சந்தை ஏதும் நடைப்பெறவில்லை,

## 8). தண்ணீர் வசதி

இந்நகராட்சியில் கொள்ளிடம் கூட்டுக்குடிநீர் திட்ட செயல்பாட்டில் நான்கு குடிநீர் விநியோக மேல்நிலை நீர்தேக்க தொட்டிகள் மூலம் குடிநீர் ஒரு நாள் விட்டு ஒரு நாள் 1 1/2 மணி நேரம் வீதம் 30.00 லட்சம் லிட்டர் குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது. இவற்றுடன் கைப்பம்பு 19–ம் மின்விசையுடன் கூடிய ஆழ்குழாய் கிணறுகள் 67–ம் செயல்பட்டு வருகிறது. மேற்கண்ட குடிநீர் ஆதாரங்கள் மூலமாக நபர் ஒருவருக்கு நாள் தோறும் 87 LPCD குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

| | | |
|---|---|---|
| பொது குழாய்கள் | – | 78 |
| வீட்டுக்குழாய் இணைப்புகள் | – | 4100 |

## 9). கழிவு நீர் வடிகால்கள்

இந்நகராட்சியில் பாதாள சாக்கடை திட்டம் பக்கா (34.48கி.மீ), கச்சா (0.62கி.மீ), சாக்கடைகள் நகராட்சியின் சுகாதார முறையில் பராமரிப்பில் உள்ளன.

இந்நகராட்சி எல்லைக்குள் உள்ள சாலைகள் நகராட்சியினால் பராமரிக்கப்பட்டு வருகிறது. ஆக்கிரமிப்புகள் அகற்றுவதற்கு நில அளவை செய்யப்பட்டு வருகிறது. பாலங்கள், ஆற்றோடை பாதைகள், மதகுகள் ஆகியவை இல்லை ஏனெனில் நகராட்சி எல்லைக்குட்பட்ட சாலைப் பகுதிகளில் ஆறுகள் ஏதும் குறுக்கிடவில்லை. நகராட்சி எல்லைப்பகுதியில் ஆறுகள் ஏதும் செல்லவில்லை.

## 10). தெருவிளக்கு வசதி

அறிக்கை ஆண்டில் பராமரிக்கப்பட்டு வரும் விளக்குகளின் மொத்த எண்ணிக்கை விபரம்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | 40 W LED lights | – | 1 | எண்ணிக்கை |
| 2. | 120 W LED lights | - | 540 | எண்ணிக்கை |
| 3. | 72 W LED lights | - | 69 | எண்ணிக்கை |
| 4. | 48 W LED lights | - | 305 | எண்ணிக்கை |
| 5. | 20 W LED lights | - | 638 | எண்ணிக்கை |
| 6. | 200 W CFL lights | - | 3 | எண்ணிக்கை |
| 7. | 60 W CFL lights | - | 6 | எண்ணிக்கை |
| | **மொத்தம்** | - | **1562** | |

அறிக்கை ஆண்டில் தெருவிளக்கு பராமரிப்பு செலவு ரூ. 11.36 லட்சமும், மற்றும் தெருவிளக்கு மின் கட்டணமாக ரூ. 18.24 லட்சமும் செலவிடப் பட்டுள்ளது.

## 11). பொது நலம் மருத்துவ உதவி

இந்நகராட்சி எல்லைக்குள் 5 தனியார் மருத்துவமனையும் அரசு மருத்துவமனையும் தொழிலாளர் ஈட்டுறுதி மருந்தகமும் அரசு மருத்துவமனையும் ( பாரத மிகு மின் நிறுவன மருத்துவமனை) உள்ளன. தேசிய தொழில்நுட்ப கழக வளாகத்தில் அரசு மருத்துவமனைகளும் உள்ளன.

### தனியார் மருத்துவமனைகளின் விபரம்

1. மில்லர் மருத்துவமனை, துவாக்குடி.
2. சி.எஸ்.ஐ மிஷன் மருத்துவமனை, ராவுத்தாண்மேடு, துவாக்குடி.
3. சி.எஸ்.ஐ மிஷன் மருத்துவமனை, துவாக்குடிமலை.
4. நஷீர் மருத்துவமனை, அக்பர்சாலை, துவாக்குடிமலை.
5. ஐஸ்வர்யா, மெடிக்கல் சென்டர், துவாக்குடிமலை.
6. சுக்ருதீன் மருத்துவமனை, துவாக்குடிமலை.

**அரசு மருத்துவமனைகளின் விபரம்**

இந்நகராட்சி பகுதியில் 01.07.2014 முதல் அரசு மருத்துவமனை இயங்கி வருகிறது. இது தற்போது விரிவுப்படுத்தப்பட்டு 32 படுக்கைகள் கூடுதலாக நிறுவி செயல்பட்டு வருகிறது. நகராட்சி மூலம் மருத்துவமனைகள் ஏதும் பராமரிக்கப்படவில்லை.

## 12). பொது சுகாதாரம்

இந்நகராட்சியில் சுகாதார ஆய்வாளர் பணியிடத்தில் திரு.எம்.ஐயப்பன் என்பவர் பணிபுரிந்து வருகிறார், பொது சுகாதார பிரிவில் மொத்த தூய்மை பணியிடங்களின் எண்ணிக்கை 23 அதில் தற்போது 13 தூய்மை பணியாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள் மற்றும் தனியார்மயம் மூலம் ஒப்பந்த அடிப்படையில் 54 தூய்மை பணியாளர்கள் பொது சுகாதார பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## 13). பிறப்பு விகிதமும் மகப்பேறு உதவியும்

### அறிக்கை ஆண்டில் பிறப்பு இறப்புகளை பதிவு செய்யும் பணி

அறிக்கை ஆண்டில் பதிவு செய்யப்பட்ட பிறப்புகள் 110 ஆகும். நகராட்சி நிர்வாகத்தின் கீழ் மகப்பேறு இல்லங்கள் பராமரிக்கப்படவில்லை. குழந்தைகள் காப்பகம் ஊராட்சி ஒன்றியம் மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது.

## 14). இறப்பு விகிதம் மற்றும் தொற்று நோய்கள்

1. அறிக்கையாண்டில் பதிவு செய்யப்பட்ட இறப்புகள் : 144
2. காலரா அம்மை போன்ற பல்வேறு நோய்கள் மூலம் இறப்புகள் ஏதும் இல்லை. மற்ற நோய்கள் மூலம் ஏற்பட்ட மரணம் குறித்த விளக்கம் கீழ்கண்டவாறு உள்ளன.

1. காலரா – இல்லை
2. அம்மை – இல்லை
3. பிளேக் – இல்லை
4. மலேரியா – இல்லை
5. சீதபேதி – இல்லை
6. காய்ச்சல் – இல்லை
7. பிற மூச்சுவை நோய்கள் – இல்லை

8. பிற காரணங்களால் – 144
9. வெறிநாய் கடியினால் – இல்லை

**கொசு ஒழிப்புத்திட்டம்.**

இந்நகராட்சியில் பொது சுகாதார பணியாளர்களைக் கொண்டு தினமும் சுழற்சி முறையில் 1 முதல் 15 வார்டுகளுக்கும் கைத் தெளிப்பான் இயந்திரம் மூலம் கொசு மருந்து தெளித்து பொது சுகாதாரம் பராமரிக்கப்பட்டு வருகிறது. 16 முதல் 21 வார்டுகள் பாரதமிகுமின் நிறுவனம் மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும் DBC 20 பணியாளரர்களை கொண்டு (Domestic Breading Checker) டெங்கு ஒழிப்பு மற்றும் தடுப்பு பணிகள் பார்த்து வருகின்றனர். டெங்கு கொசுப்புழு ஒழிப்பு மற்றும் டெங்க நோய் தடுப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 15). கொக்கிப்புழு, பிளேக்

அறிக்கை ஆண்டில் இந்நோயால் யாரும் பாதிக்கப்படவில்லை.

## 16). நோய் தடுப்புத்திட்டம்

குழந்தைகளுக்கு சொட்டு மருந்து பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்புத்துறை மூலம் வழங்கப்பட்டு வருகிறது. வருடந்தோறும் பள்ளிகளுக்கான வாழ்வொளித்திட்டம் மூலம் மாணவ மாணவியர்களுக்கு ஆரம்ப சுகாதார நிலையம் மூலம் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

## 17). குடும்ப நலத்திட்டம்

குடும்ப நலத்திட்டத்திற்கென அலுவலர் எவரும் தனியாக நியமனம் செய்யப்படவில்லை. விரிவு படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் மூலம் குடும்ப நலத்திட்டம் செயல்படுத்தப் பட்டு வருகிறது.

## 18). சிறுசேமிப்பு

சிறுசேமிப்புத் திட்டத்தின் கீழ் மாவட்ட ஆட்சித்தலைவரால் இந்நகராட்சிக்கு இலக்குகள் நிர்ணயம் செய்யப்படவில்லை.

## 19). பொது சுகாதாரம்

அறிக்கை ஆண்டில் 15 சமுதாயக் கழிவறைகள் 4 பொது கழிவறைகள் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. காலை மாலை இருவேளை தெருக்கள் கூட்டி சுத்தம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் வீடு தோறும் நகராட்சி தூய்மை பணியாளர்கள் மூலம் நேரடியாக உலர், ஈரக்கழிவுகள் தனித்தனியாக பிரித்து பெறப்பட்டு வருகிறது. அவ்வாறு பெறப்படும் குப்பைகள் நகராட்சியிலுள்ள டிப்பர் லாரி மற்றும் டம்பர் பிளேசர் வாகனம் மற்றும் TATA ACE வாகனம் மூலம் சேகரிக்கப்பட்டு வருகிறது.

## 20). வீட்டு கழிப்பறைகள்

அ) நகரில் மொத்த குடியிருப்புகள் 10894 இதில் கழிப்பிடங்கள் உள்ள குடியிருப்பு 10252 ஆகும்.

ஆ) கழிவறைகள் இல்லாத வீடுகளில் வசிப்பவர்கள் நகராட்சியினால் பராமரிக்கப்படும் பொது கழிப்பிடங்களை கட்டணமின்றி பயன்படுத்தி வருகின்றனர்.

இ) தூய்மை பணியாளர்கள் துப்புரவு பணிகளை செவ்வனே செய்து வருகிறார்கள்.

ஈ) துணை இயக்குநர் பொதுசுகாதாரம், திருச்சி அவர்கள் மூலம் யானைக்கால் நோய் ஒழிப்புத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நகரில் கொசு உற்பத்தியினை குறைக்க அவ்வப்போது கொசு மருந்து தெளிக்கப்பட்டு வருகிறது.

உ) இந்நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் 1056 தனி நபர் கழிப்பிடங்கள் கட்ட குறியீடு நிர்ணயிக்கப்பட்டு 1056 கழிப்பறைகள் கட்டப்பட்டுள்ளன.

## 21). கலவை உரம்

இந்நகராட்சியில் கலவை உரம் தயாரிப்பதற்கு Onsite Composting Center -3 இயங்கி வருகின்றது. மேலும் 1 நுண் உரம் தயாரிக்கும் மையம் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு கட்டுமான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ராவுத்தான்மேடு எம்.டி சாலை மற்றும் மேலத் தெருவில் இயங்கும் Onsite Composting Center மூலம் மக்கும் குப்பைகளைக் கொண்டு உரம் தயாரிக்கப்படுகிறுது. முன்னதாக அனைத்து வீடுகளிலும் மக்கும் குப்பை மற்றும் மக்காத என தரம் பிரித்து தூய்மை பணியாளர்களால் சேகரிக்கப்படுகிறது. அவ்வாறு சேகரிக்கப்பட்ட ஈரக்கழிவுகள்

எம்.டி சாலை, ராவுத்தான்மேடு மற்றும் மேலத்தெரு ஆகிய இடங்களில் இயங்கும் நுண்உரக்கூடம் மூலம் அறிவியல் முறையில் கையாளப்பட்டு நுண் உரங்களாக மாற்றப்படுகின்றன. இவ்வுரங்கள் அனைத்தும் விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது.

## 22). அச்சம் , அருவருக்கத்தக்க மற்றும் அபாயகராமான தொழில் உரிமம் (D&O Trade Licence)

1920 ம் வருடத்திய தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 249 பிரிவின் படி துவாக்குடி நகராட்சியில் அச்சம், அருவருக்கத்தக்க மற்றும் அபாயகரமான தொழில் உரிம கட்டணம் கீழ்கண்ட விவரப்படி வசூல் செய்யப்பட்டு வருகிறது..

2015–16 ஆண்டிற்கு உரிம கட்டணத்தொகை – ரூ. 59781/–

2016–17 ஆண்டிற்கு உரிம கட்டணத்தொகை – ரூ. 76175/–

2017–18 ஆண்டிற்கு உரிம கட்டணத்தொகை – ரூ. 1,03848/–

2018–19 ஆண்டிற்கு உரிம கட்டணத் தொகை – ரூ.95093/–

2019–20 ஆண்டிற்கு உரிம கட்டணத் தொகை – ரூ.113264/–

## 23). தீயணைப்பு நிலையம்

இந்நகராட்சி பகுதியில் உள்ள பாரதமிகு மின் நிறுவன வளாகத்தில் தீயணைப்பு நிலையம் செயல்பட்டு வருகிறது.

## 24). போக்குவரத்து

தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் மூலம் பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

## 25). சந்தைகள், இருசக்கர வாகன நிறுத்துமிடம்

துவாக்குடி நகராட்சிக்கு சொந்தமான நிலங்கள் இல்லை என்பதால் சந்தைகள் மற்றும் பேருந்து நிலையங்கள் பராமரிக்கப்படவில்லை. விவசாயத்துறை மூலம் உழவர் சந்தை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

## 26). பேருந்து நிலையம்

நகராட்சிக்கு சொந்தமான நிலங்கள் இல்லை என்பதால் பேரூந்து நிலையம் ஏதும் பராமரிக்கப்படவில்லை. தேசிய நெடுஞ்சாலைத்துறையினருக்கு சொந்தமான இடத்தில் நகர பேரூந்துகள் வந்து செல்கின்றன, மேற்படி இடம் தேசிய நெடுஞ்சாலை துறை மூலம் நான்கு வழி சாலை அமைக்கப்பட்டுள்ளது, பேரூந்து நிலையம் அமைக்க நெடுஞ்சாலைத்துறைக்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது.

## 27). வாடகை உந்து நிலையம் (சைக்கிள் ரிக்ஷா மற்றும் வண்டி ஸ்டாண்டுகள்)

வாடகை உந்துநிலையம் இந்நகராட்சியில் பராமரிக்கப்படவில்லை.

## 28). சாலையோர மரங்கள்

இந்நகராட்சியால் பராமரிக்கப்படும் சாலைகளின் இருபுறங்களிலும் மரக்கன்றுகள் நடப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது.

## 29). விரிவு மேம்பாட்டுத்திட்டம்

இத்தலைப்பின் கீழ் நடவடிக்கை ஏதும் மேற்கொள்ளப்படவில்லை.

## 30). வரை கடப்புகள்

இந்நகராட்சி பகுதி நில அளவை செய்யப்படவில்லை. நில அளவை மேற் கொள்ள சர்வே துறையினருக்கு கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது, விரைவில் நில அளவை செய்யப்படவுள்ளது. சென்னை–5 நில அளவை மற்றும் நிலவரி திட்ட இயக்குநரின் கடிதம் ந.க.கே4/32307/2018 (நி.அ.) நாள் 23.06.20 கடிதத்தின்படி நில அளவை பணிகள் துவங்க நடவடிக்கையில் உள்ளது.

## 31). தொழிற்பகுதியாக அறிவித்தல்

இந்நகராட்சி பகுதியில் பாரதமிகு மின் நிறுவனம் இயங்கி வருகிறது. இந்நிறுவனத்தில் சுமார் 20000 நபர்கள் பணிபுரிந்து வருகிறார்கள், இந்நிறுவனத்தின் மூலம் சொத்து வரி மற்றும் மூன்றில் ஒரு பங்கு தொழில்வரி நகராட்சிக்கு வருவாயாக பெறப்பட்டு வருகிறது, இது தவிர சிட்கோ தொழில்பேட்டை பகுதியில் தோராயமாக 156 கம்பெனிகள் உள்ளன அதில் 41 கம்பெனிகள் இயங்கி வருகின்றன. மொத்த மக்கள் தொகையில் 50% பேர் விவசாயிகள் ஆவர்.

மக்கள் தொகையில் நபர் ஒன்றுக்கு வருமானம் கீழ்கண்டவாறு உள்ளது.

1. சொத்துவரி – 140 %
2. தொழில்வரி – 15 %

அறிக்கையாண்டில் 90 எண்ணம் புதியதாக வரி விதிக்கப்பட்டு நடப்பு ஆண்டிலேயே வசூல் செய்யப்பட்டுள்ளது, இதில் வரி திருத்தம் செய்யப்பட்ட சொத்துவரியும் அடங்கும்.

## 32). பொது வருவாய்

அ. பிரிவு 81(1) தமிழ்நாடு மாவட்ட நகராட்சி உள் சட்டம் – 1920ன் படி கீழ்கண்டவாறு சொத்துவரி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

வருட வாடகை மதிப்பில் அரைவருட விகிதம் ( 1998 – 99 இரண்டாம் அரையாண்டு முதல் )

1. பொது காரியங்களுக்கு – 4%
2. தண்ணீர் வரி – 2%
3. விளக்கு வரி – 2%
4. சாக்கைடை வரி – 1%
5. துப்புரவு வசதி வரி – 1%
6. காலி நில வரி – சொத்து மதிப்பில் 0.05% நிர்ணயம் செய்யப்பட்டு வசூலிக்கப்பட்டு வருகிறது.

## 33). 2. தொழில்வரி –

1920 ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் திருத்தச்சட்டம் (59/1998)– ன் படி பிரிவு –124, உட்பிரிவு –13 ல் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை கொண்டு துவாக்குடி நகர்மன்றம் தனது 29.8.08 ம் நாளிட்ட தேதிய 305 வது தீர்மானத்தில் துவாக்குடி நகராட்சி எல்லைக்குள் நுண்ணறிவு தொழில்கள், வணிக தொழில்கள், மரபு

தொழில்கள் மற்றும் பணித் தொழில்கள் புரிவோருக்கும், வெளியில் தொழில் புரிந்து இந்நகராட்சி எல்லைக்குள் குடியிருந்து வருவோருக்கும் தொழில் வரி விதித்து வசூலிக்கப்பட்டு வரும் தொழில் வரியினை 1.10.2008 இரண்டாம் அரையாண்டு முதல் ஏற்கனவே வசூல் செய்யப்பட்டு வந்தது மேலும் 2013–14 ம் ஆண்டு இரண்டாம் அரையாண்டு முதல் தொழில்வரி சீராய்வு செய்து ஏற்கனவே உள்ள தொழில்வரியில் 25 சதவீதம் உயர்த்தி இந்நகராட்சி மன்ற தீர்மான எண். 421 நாள். 12.09.2013 ன் படி கீழ்கண்டவாறு நிர்ணயம் செய்து நாளது தேதி வரை வசூலிக்கப்பட்டு வருகிறது. மேலும், 2017–18ம் ஆண்டு இரண்டாம் அரையாண்டு முதல் தொழில்வரி சீராய்வு செய்து ஏற்கனவே உள்ள தொழில்வரியில் 25 சதவீதம் உயர்த்தி இந்நகராட்சி மன்ற தீர்மான எண். 180 நாள். 25.05.2018 ன் படி கீழ்கண்டவாறு நிர்ணயம் செய்து நாளது தேதி வரை வசூலிக்கப்பட்டு வருகிறது.

## தொழில்வரி விதிப்பு விபரங்கள்

| வ.எண் | வருட வருமானம் (ரூபாயில்) | தற்போதைய அரையாண்டு தொழில்வரி ( ரூபாயில்) | 25% உயாத்தப்பட்ட தொழில்வரி ( ரூபாயில்) |
|---|---|---|---|
| 1 | 21000 வரை | இல்லை | இல்லை |
| 2 | 21000 முதல் 30000 வரை | 120/– | 150/– |
| 3 | 30001 முதல் 45000 வரை | 375/– | 395/– |
| 4 | 45001 முதல் 60000 வரை | 590– | 740/– |
| 5 | 60001 முதல் 75000 வரை | 900/– | 1130/– |
| 6 | 75001 க்கு மேல் | 1175/– | 1250/– |

## 34). முடிவுரை

மேற்படி நிர்வாக அறிக்கை இந்நகர்மன்ற தீர்மான எண் 538 நாள் 30.09.2020ன் படி ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இந்நகர மக்களின் அடிப்படை தேவைகளான குடிநீர்வசதி , பொது சுகாதார வசதி, சாலை வசதி மற்றும் மின்விளக்கு வசதிகள் அனைத்தும் தொய்வு இல்லாமல் வழங்க இந்நகராட்சி நிதி நிலையினை கருத்தில் கொண்டு பொது மக்களின் அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்றும் வகையில் இந்நகராட்சியால் சமர்பிக்கப்படும் கருத்துருக்களை ஏற்று அதற்கு பரிந்துரை செய்து இத்திட்ட பணிகளை முழுமையாகவும் துரிதமாகவும் செயல்படுத்த ஒத்துழைப்பும் ஆதரவும் அளித்த நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் மற்றும் இந்நகராட்சியின் அனைத்து உள் மற்றும் வெளி அலுவலர்கள் மற்றும் துாய்மை பணியாளர்கள் அனைவரையும் பாராட்டி மேற்படி நிர்வாக அறிக்கையை நன்றி கூறி முடிக்கிறேன்.

**ஆணையர்,**
**துவாக்குடி நகராட்சி.**

**<u>நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை</u>**

| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| திரு.ஜே.வினாயகம், B.Sc.,<br>ஆணையர் ,<br>துவாக்குடி நகராட்சி,<br>துவாக்குடி. | நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்கள்,<br>நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகம்,<br>எண்.1 ஏ.ஒய்.ஏ நாடார் சாலை,<br>கொடி மரத்து மூலை அருகில்,<br>தஞ்சாவூர். |

ந.க.எண். 748 /2020 / எச்1 நாள் 24.10.2020

அய்யா,

| | |
|---|---|
| பொருள்: | நிர்வாக அறிக்கை - துவாக்குடி நகராட்சி – 2019–2020ம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை அனுப்புதல் தொடர்பாக . |
| பார்வை: | இந்நகர் தீர்மான எண். 538 நாள் :30.09.2020 |

*************

இந்நகராட்சியின் 2019–2020ம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

ஆணையர்,
துவாக்குடி நகராட்சி.

இணைப்பு :
2019 – 2020ம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை –2 பிரதிகள்.